# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதி விசேஷமானது

අංක 2399/33 – 2024 අගෝස්තු මස 28 වැනි බදාදා – 2024.08.28

*2399/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2024 ஆம் ஆண்டின் 99 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/16/2018/H/26.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: பிய/3/1/1/501.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, ஓகத்து 26.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், பியகம.

II. **காணியின் விபரம்** : மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், பியகம பிரதேச செயலாளர் பிரிவில், அதிகாரி பற்று சிறு பிரிவில், இல. 280, பியகம கிராம அலுவலர் பிரிவில் பியகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட 2018.05.15 ஆந் திகதிய GA/ BIY/2018/150 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர்கள் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' - மில்லகஹவத்தை - விஸ்தீரணம் : 1.8692 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீ. அ. அ.) ; கிழக்கு : எம். எல். டி. தர்மசிறி பெரேரா உரிமை கோரும் மில்லகஹவத்தை, கே. ஏ. தாரக சஞ்ஜீவ உரிமை கோரும் மில்லகஹவத்தை மற்றும் எம். எல். டி. தர்மசிறி பெரேரா உரிமை கோரும் மில்லகஹவத்தை ; தெற்கு : வீதி, ஈ. ஏ. குணசேன உரிமை கோரும் தெல்கஹவத்தை மற்றும் கே. ஜி. அனுலாவதி உரிமை கோரும் தெல்கஹவத்தை ; மேற்கு : துண்டு B.


1A – G42592 – 09 (2024/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*02.* **துண்டு 'B' - தெல்கஹவத்தை - விஸ்தீரணம் : *1.2796* ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீ. அ. அ.) ; கிழக்கு : துண்டு A மற்றும் கே. ஜி. அனுலாவதி உரிமை கோரும் தெல்கஹவத்தை ; தெற்கு : ஏ. பி. ஜகத் குமார உரிமை கோரும் ஹேனஹத்த காணி, பிரியதர்ஷன சேனாரத்ன உரிமை கோரும் ஹேனஹத்த காணி, கே. ஜி. சிசிர உரிமை கோரும் ஹேனஹத்த காணி மற்றும் புபுது பிரசன்ன உரிமை கோரும் ஹேனவத்த காணி ; மேற்கு : ஒவெல்கா சர்வதேச நிறுவனம் உரிமை கோரும் ஹேனஹத்த காணி, வீதி, ஆல்பர்ட் பெரேரா உரிமை கோரும் ஹேனஹத்த காணி மற்றும் ரஜித பெரேரா உரிமை கோரும் ஹேனஹத்த காணி.

EOG 08 - 0330

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.